IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 159/2021

Deposition of Witness for P.W.11

| | | |
|---|---|---|
| NAME | - | Dr.Selvaraj |
| FATHER NAME | - | Karuppiah |
| VILLAGE | - | Santhi Nagar |
| TALUK | - | Palayankottai |
| OCCUPATION | - | Professor Forensic Medical Officer (Rtd.) |
| AGE | - | 71 years |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.09.2025. Witness appeared through Video Conferencing.

As per Sec 530 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 recording of evidence ordered to be held through VC Mode. சாட்சி VC மூலமாக சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை–</u>

நான் சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 05.01.2015–ம் தேதி வேலூர், அடுக்கம்பாறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்த போது வேப்பங்குப்பம் காவல் நிலைய குற்ற எண். 1/2015 வழக்கில் இறந்து போன சீனிவாசன் வயது 26, என்பவரின் பிரேதத்தை பிரேதபரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதத்தினை வேப்பங்குப்ப காவல் நிலைய தலைமை காவலர் 580 திரு.ஆனந்தன் என்பவர் கொண்டு வந்து அடையாளம் காட்டி ஆஜர்

செய்தார். அந்த பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன். மேற்படி பிரேதம் அழுகிய நிலையில் இருந்தது. பிரேதத்தில் இருந்து உடல் உள்உறுப்புகளை சேகரித்து தடய அறிவியல் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து ஆய்வு அறிக்கையை பெற்றேன். ஆய்வறிக்கையில் எத்தேல் ஆல்கஹால் அவர் உடலில் கண்டறியப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்தவர் தண்ணீரில் மூழ்கியதால் மூச்சு தினறல் ஏற்பட்டு இறந்துள்ளார் என கருத்துரை வழங்கினேன். இறந்தவருக்கு எந்த வெளிப்புற காயங்களோ காணப்படவில்லை. இறந்தவர் உடல் அழுகிய நிலையில் காணப்பட்டதால் இறப்பு 4 அல்லது 5 நாட்களுக்கு முன்பு ஏற்பட்டிருக்கக் கூடும். நான் வழங்கிய பிரேதபரிசோதனை Ex.P7. நான் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.8. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரனை</u>

எனது கருத்துரைப்படி 01.01.2015-ல் இருந்து 02.01.2015-குள் இறப்பு ஏற்பட்டிருக்கக்கூடும் என்றால் சரிதான். உடல் உள் உறுப்பு ஆய்வறிக்கையில் வயிறு, குடல், கல்லீரல், சிறுநீரகம், மூளை மொத்தம் சேர்த்து 643 மி.கி. எத்தைல் ஆல்கஹால் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வெளிப்புற காயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். Oozing out of muddy watery fluid-ல் தான் இறந்துள்ளார் என்றால் சரிதான். நான் பிரேத பரிசோதனை சான்று 05.01.2015-ல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஒரு நபர் குடி போதையில் தவறி கிணற்றில் விழும் போது

இதுபோன்ற இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. இறந்தவருடைய உடலில் 643 மி.கி. எத்தேல் ஆல்கஹால் இரத்தத்தில் கலந்துள்ளபோது அவருக்கு தன்னிலை மறக்கும் நிலை, தற்கொலை எண்ணம் ஏற்படும் என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி- இறந்த 26 வயது உடைய நபர் உடல் எவ்வளவு மி.கி எத்தைல் அல்கஹால் சாதாராண நிலையில் இருப்பார் என்றால் 300 மி.கி எத்தைல் அல்கஹால் வரை அவரது உடல் ஏற்கும். 300 மி.கி மேல் எத்தைல் அல்கஹால் அவர் உட்கொண்டால் அவர் கோமா நிலைக்கு செல்லக்கூடும்.

Ensured that the witness evidence is recorded through video conferencing is not tutored and witness is not in the company of any body at the time.
Typed to my dictation in open Court, on 04.09.2025 read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be Correct.

Sd./ P.V.Sandilyan,
Additional District Judge(FTC),
Vellore.